**அனுப்புநர்**
டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப.,
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5

**பெறுநர்**
1) அனைத்து மாமன்ற தலைவர்கள் (சென்னை தவிர)
2) அனைத்து நகர்மன்ற தலைவர்கள்

**ந.க.எண். 36427/2003/ஆர்2,** **நாள். 25.07.2007**

ஐயா,

**பொருள்** குத்தகை – நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் அசையா சொத்துக்களாகிய கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் – தனியாருக்கு குத்தகைக்கு விடுதல் – புதுப்பித்தல் திருத்திய நடைமுறைகள் ஆணை வெளியிடப்பட்டது சம்பந்தமாக.

**பார்வை** 1) அரசாணை (நிலை) எண். 92, ந.நி.ம.கு.வ.துறை, நாள். 03.07.2007

******

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் அசையா சொத்துக்களாகிய கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவைகளை தனியார்களுக்கு குத்தகை அடிப்படையில் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது மற்றும் குத்தகையை கால நீடிப்பு மூலம் புதுப்பிப்பது, தற்போதுள்ள அனுமதியற்ற அனுபோகதாரர்களுக்கும் மற்றும் குத்தகை உரிமதாரர்களின் வாரிசுதாரர்களுக்கும் உரிமம் பெயர் மாற்றம் செய்வது தொடர்பான திருத்திய நெறிமுறைகள் பார்வையில் கண்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் நகலினை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கிறேன். இனி வருங்காலங்களில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மேற்படி அரசாணையானது இத்துறையின் வலைதளத்திலும் (www.tn.gov.in/cma) வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாக ஆணையர்

26/7/07

**இணைப்பு**– ஒன்று.